# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்**, இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 81/ந/2024
நாள்:. 24.02.2025

திரு. கே. கன்னியப்பன்,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர், ... எதிர்மனுதாரர்
திருச்செங்கோடு நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் அஞ்சல், போக்கம்பாளையம், க.எண்.3/133 என்ற முகவரியை சேர்ந்த திரு. கே. கன்னியப்பன் என்பவரது 26.03.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2024 அன்று பெறப்பட்டு, 81/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் அஞ்சல், போக்கம்பாளையம், க.எண்.3/133 என்ற முகவரியை சேர்ந்த திரு. கே. கன்னியப்பன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட கிழக்கு ரத வீதியில், எங்களுக்கு சொந்தமான கட்டிடம் உள்ளது. 11.03.2024–ந் தேதி சுமார் 1.30 மணியளவில், திருச்செங்கோடு நகராட்சியிலிருந்து சுமார் 20 பேர்கள் எங்கள் கட்டிடத்தில் வாடகைக்கு இருந்துவரும் பழக்கடை நடத்தி வருகின்ற திரு. சிவகுமார் என்பவரிடம் கடையை காலி செய்ய சொல்லி மிரட்டியுள்ளார்கள். திரு. சிவகுமார் எதற்கு காலி செய்ய சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, கடைக்கு வரி செலுத்தவில்லை என்றும் மிரட்டியுள்ளார்கள். மேலும், கடையில் உள்ளே மெயின் சுவிட்சை நிறுத்தியுள்ளார்கள். மேலே கம்பத்தில் செல்லும் மெயின் ஒயரை துண்டித்து விடுவோமடா என்றும் கூறியுள்ளார்கள்.

மேலும், கடையின் உள்ளே இருந்த பழ தார்களையும், பூஜா சாமான்களையும், வெளியே தூக்கி எரிந்துள்ளார்கள். பொருட்களை சேதப்படுத்தியுள்ளார்கள். அதனால், வாடகைக்கு இருந்து வரும் திரு. சிவகுமார் உடல் நிலை சரியில்லாதவர் என்பதை சொல்லியும் கேட்காமல், கையை பிடித்து வெளியே இழுத்துள்ளார்கள். கடையில் உள்ளே இருந்த பொருட்கள் சேதமடைந்துள்ளது.

எங்களுக்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல், அராஜகமாக, நாங்கள் வெளியே இருந்த சமயத்தில் இது நடந்துள்ளது. இது சம்பந்தமாக, ஏன் இப்படி அராஜகம் செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரின் உத்தரவின் பேரில் நாங்கள் செய்கிறோம் என்று சொன்னார்கள். பழக்கடை நடத்தி வருகின்ற திரு. சிவக்குமார் சொன்ன தகவல் அடிப்படையில் நாங்கள் திருச்செங்கோடு நகர காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் திருமதி தங்கம், உதவி ஆய்வாளர் அவர்கள் புகார் மனுவை வாங்க மறுத்துவிட்டார்கள். ஏன் என்று கேட்டதற்கு, புகாரினை திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரிடம் கொடுங்கள் என்று கூறினார்கள். அதனால் திருச்செங்கோடு நகர காவல் நிலையத்திற்கு எனது புகார் மனுவினை பதிவு தபால் மூலமாக அனுப்பியுள்ளோம்.

அதற்கு பிறகு என் மகன் மகேந்திரன் திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரிடம் புகார் கொடுப்பதற்கு சென்றபோது நகராட்சி ஆணையாளர் அவர்கள் அலுவலகத்தில் இல்லாத காரணத்தினால், அலுவலகத்திலிருந்து இளநிலை உதவியாளர் திரு. யுவராஜ் மற்றும் பேர் தெரியாத ஊழியர் ஒருவர், ஆகிய இருவரும் ஏண்டா எங்கள் மீதே புகார் கொடுக்க திருச்செங்கோடு நகர காவல் நிலையத்திற்கு சென்றுள்ளீர்கள், திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் எந்த விதமான உங்கள் புகாரையும் எந்தகாலத்திலும் பெறமாட்டார்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் திருச்செங்கோடு நகர காவல் நிலையம் காவல் துறையிலோ, திருச்செங்கோடு அலுவலக மின்சார துறையிலோ முறையான அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியிருப்பதால் எங்களுக்கு சாதகமாகதான் செயல்படுவார்கள். அதனால் தான் திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் உத்தரவு பேரில் எதை செய்தாலும் எங்கள் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்று கூறினார்கள்.

பல ஆண்டுகள் அச்சகம் நடத்தி வந்த திரு. செந்தில்குமார் அச்சக உரிமையாளர் கடையை காலி செய்துவிட்டு கடை சாவியை 31.05.2018 காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டார். அதனால், அந்த கடையையும் மற்ற கடைகளையும் இதுவரை வாடகைக்கு விடமுடியவில்லை. மேலும், இந்த கட்டிடம் சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. மற்ற மூன்று கடைகளும் காலியாக இருப்பது போல், ஏற்கனவே வாடகைக்கு இருந்து வருகின்ற திரு. சிவக்குமார் என்பவரையும் காலி செய்ய திரு. சின்னப்பன் மகன் திரு. கணேசன் தூண்டுதலின் பேரில், நகராட்சி ஊழியர்களும், நகராட்சி ஆணையரும் செயல்பட்டுள்ளார்கள். அவர்கள் நடந்து கொண்ட செயலைப் பார்த்தால் திட்டமிட்ட சதியென்று தெரிகிறது.

மேலும், 13.03.2024–ம் தேதி மீண்டும் காலை சுமார் 9.15 மணியளவில் நகராட்சியில் பணிபுரிந்து வருகின்ற இரண்டு ஊழியர்கள் மேற்படி திரு. சிவக்குமார் என்பவரை காலி செய்ய சொல்லி மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு சுமார் 12.30 மணியளவில் வரி வசூல் செய்பவர் மற்றும் எழுத்தர் ஆகியோர் வந்திருந்தார்கள். நான் திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் பேரில் உதவி காவல் ஆய்வாளர் வந்த போது இருவரும் சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் மற்றும் 30 ஊழியர்கள் வந்து அத்துமீறி எங்களை மிரட்டினார்கள். அதற்கு பிறகு சமாதனம் ஆகி சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு அதில் ஒரு ஊழியர் இதனால் என்னை பணியிடம் நீக்கிவிட்டார்கள் என்று கூறி தகாத வார்த்தைகளால் பேசினார். அதற்கு பணியிடம் நீக்கிய ஊழியர் பேசும்போது ஆணையாளர் அந்த ஊழியரை அடக்கவில்லை, திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் எங்களது எதிரிகளுக்கு சாதகமாகவும் எங்களுக்கு பாதகமாகவும் செயல்பட்டு வருகிறார் என்பது ஊர்ஜிதம் ஆகின்றது. எங்களை மிரட்டி 15 நாட்களுக்குள் வரி செலுத்த வேண்டுமென்று எழுதி வாங்கி சென்றுவிட்டார்கள்.

மேலும், இது சம்மந்தமாக உதவி பொறியாளர், இயக்கமும் & பராமரிப்பும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மத்திய பிரிவு, திருச்செங்கோடு அவர்களின் க. எண். உ.பொ./ இப / மத்திய பிரிவு / தி.கோடு / க.தனி / எண்.62/24, நாள் 13.03.2024 மூலம் திருச்செங்கோடு

நகராட்சி ஆணையாளருக்கு மின் துண்டிப்பு செய்யும் செயலில் ஈடுபட்ட பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொண்டுள்ளார் என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆகவே, சட்டப்படி எந்தவிதமான முன்னறிவிப்பு கொடுக்காமல் அத்துமீறி, சட்டத்திற்கு புறம்பாக நடந்துகொண்ட திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி ஊழியர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருச்செங்கோடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் தனது 09.11.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.**

"திரு.கன்னியப்பன் என்பவரது மனுவில் 11.03.2024 சுமார் 1.30 மணி அளவில் திருச்செங்கோடு நகராட்சியிலிருந்து சுமார் 20 நபர்கள் மனுதாரரின் கட்டிடத்தில் வாடகைக்கு பழக்கடை நடத்தி வரும் திரு. சிவக்குமார் என்பவரை மிரட்டியும் மின் இணைப்பு துண்டிப்பு செய்ய முயன்றதாகவும் கடையிலிருந்து பழ தார்கள் மற்றும் பூஜா சாமான்களை தூக்கி எரிந்தும் பொருட்களை சேதப்படுத்தி நகராட்சி பணியாளர்கள் அராஜகம் செய்து ஏனென்று கேட்டதற்கு ஆணையாளரின் உத்தரவின் பேரில் செய்ததாக மனுதாரர் கடையில் இல்லாத சமயத்தில் தகராறு செய்ததாகவும், மனுதாரரின் எதிரிகளான திரு. சின்னப்பன் மகன் திரு. கணேசன் தூண்டுதலின் பேரில் நகராட்சி பணியாளர்கள் செயல்பட்டு வருவதாகவும் 13.03.2024 ஆம் தேதி காலை 9.15 மணி அளவில் நகராட்சியில் பணிபுரியும் 2 ஊழியர்கள் வாடகையில் இருப்பவரை கடை காலி செய்ய தெரிவித்தும், மேலும், 15 தினங்களுக்குள் வரி செலுத்த வேண்டும் என்று மிரட்டி கடிதம் பெற்றுள்ளதாக மனு வழங்கியுள்ளார்.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் உள்ள கிழக்கு ரத வீதியில் சொத்துவரி விதிப்புகள் திரு. கந்தப்பன், திரு. சின்னப்பன் மற்றும் திரு. செங்கோடன் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. மனுதாரருக்கு கூட்டாக பாத்தியப்பட்ட கட்டிடத்திற்கு நாளது தேதி வரை சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் நிலுவையில் உள்ள விபரம் கீழ்கண்டுள்ளவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | உரிமையாளர் பெயர் | சொத்து வரி மற்றும் குடிநீர் இணைப்பு எண். | நிலுவை விபரம் | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டு | தொகை ரூ. |
| 1 | கந்தப்பன் | 054/016/900363 | 2016–2017முதல் 2024 – 2025 (சொத்து வரி) | 39450 |
| 2 | சின்னப்பன் | 054/016/900364 | | 45090 |
| 3 | செங்கோடன் | 054/016/900365 | | 18996 |
| 4 | | 054/016/900366 | | 30288 |
| 5 | | 054/016/900367 | | 24828 |
| 6 | | 054/016/900368 | | 24828 |
| 1 | கந்தப்பன்<br>சின்னப்பன்<br>செங்கோடன் | 054/016/900031 | 2014–2015 முதல் 2024–2025 வரை | 11076 |
| | | | மொத்தம் | 194556 |

இப்பொருள் தொடர்பாக கட்டிடத்தில் வாடகைக்கு இருந்து வரும் கடைகாரரிடம் சொத்து வரி சம்மந்தப்பட்ட கட்டிட உரிமையாளரிடம் தகவல் தெரிவித்து வரி (நிலுவை மற்றும் நடப்பு) செலுத்தக்கோரி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மூலம் பலமுறை நேரில் தெரிவிக்கப்பட்டது. கட்டிடத்தில் வாடகைக்கு இருப்பதால் நகராட்சி கேட்பு தாளில் கையெழுத்திட இயலாது என்றும், கட்டிட உரிமையாளர் வாடகை வசூல் செய்ய வரும் நேரத்தில் கேட்பு தாள்கள் வழங்குவதாக தெரிவித்தனர். பலமுறை கடையில் உள்ளவர்களிடம் வரி செலுத்த கோரியும் நாளது தேதி வரை சொத்து வரி எட்டு ஆண்டுகளாகவும் மற்றும் குடிநீர் கட்டணம் ஒன்பது ஆண்டுகளாகவும் தொகை செலுத்தவில்லை. நகராட்சி சட்ட விதிகளின்படி, சொத்துவரி அந்தந்த நிதியாண்டில் முதல் அரையாண்டு தொகை ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள்ளும், இரண்டாம் அரையாண்டு தொகை அக்டோபர் 30 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

சொத்து உரிமையாளர்களை தொடர்பு கொள்ள வழிவகை இல்லாததால் கட்டிடத்தில் உள்ளவர்களிடம் வரி செலுத்த தெரிவித்தும் வரி செலுத்தாமல் இருந்து வந்த நிலையில் 2023–2024–ஆம் ஆண்டு வரி நிலுவை அதிகம் உள்ள மற்றும் நடப்பு வரி செலுத்தாத நிலுவைதாரர்களின் பட்டியலை ஆணையாளர் தலைமையில் நகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கொண்ட குழுவாக 33 வார்டுகளில் கூட்டு வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. சொத்து உரிமையாளர்களது வரி நிலுவை தொகை அதிகம் உள்ளதால் வரி செலுத்த கோரியும் தவறும் பட்சத்தில் நகராட்சி விதிகளின்படி கட்டிடத்திற்கு ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கட்டிடத்தில் உள்ளவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. கடை உரிமையாளர்கள் பிரதி மாதம் வாடகை பெற்று கொள்வதாகவும், ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது என கடையில் இருந்த நபர்கள் மற்றும் அருகில் உள்ள கடைகாரர்களும் சேர்ந்து, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்கள். சொத்து உரிமையாளர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி தொகை செலுத்தாமல் இருப்பதற்கு மனுதாரர் நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உண்மைக்கு புறம்பாக கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பு துண்டிப்பு செய்வதாக கூறி வட்டாட்சியர், திருச்செங்கோடு, உதவி பொறியாளர் இயக்கம் மற்றும் பராமரிப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருச்செங்கோடு மற்றும் நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநரகம், சேலம் ஆகிய அலுவலகத்தில் மனு வழங்கியும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திருச்செங்கோடு நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார். மேற்கண்ட வழக்கில் வரி வசூல் பணியில் ஈடுபடாத நகர் மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் திரு. ராஜவேலு மீதும் காழ்ப்புணர்ச்சி காரணமாக வழக்கு தொடர்ந்துள்ளார். உரிமையாளர்கள் சார்பாக 3 நபர்களும் முழு மனதுடன் எவர் தூண்டுதலுமின்றி 15 தினங்களுக்குள் வரி செலுத்துவதாக கடிதம் வழங்கியுள்ளார். ஆனால், நாளது தேதிவரையில் வரி செலுத்தவில்லை. வரியினங்கள் மற்றும் கட்டண தொகை கொண்டு பணியாளர் ஊதியம் மின் கட்டணம், தெரு விளக்கு, சாலை அமைத்தல், பொது சுகாதார பணிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் சொத்துக்குரிய திரு.கந்தப்பன், திரு.சின்னப்பன், திரு.செங்கோடன் ஆகியோர் சொத்து வரி தொடர்பான எவ்வித மனு கடிதமும் நகராட்சிக்கு நாளது தேதி வரை வழங்கவில்லை. மேற்கண்ட கட்டிடத்திற்கு வழக்கு நிலுவை இருப்பதாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனி நபர் மீது வழக்கு இருக்கும் பட்சத்தில் நகராட்சிக்கு சொத்து வரி செலுத்த எவ்வித தடையும் இல்லை. இந்நிலையில் வரி செலுத்தாமல் இருப்பதற்காக மின் இணைப்பு துண்டிப்பு செய்வதாகவும், கடையில் உள்ள பொருட்களை சேதப்படுத்தியதாகவும், கடையில் உள்ள நபர்களை தரக்குறைவாக பேசியதாகவும் உண்மைக்கு புறம்பாக புகார் மனு வழங்கியுள்ளார். மேலும் இவ்வாறு பொய்யான புகாரினை மேதகு நடுவர் முறை மன்றம் ஏற்றுக்கொண்டால் நகராட்சியிலிருந்து பொது மக்களிடம் சொத்து வரி வசூலிக்க இயலாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இது போன்ற பொய்யான புகார்களை மேதகு நடுவர் முறை மன்றம் ஏற்கும் நேர்வில் பொதுமக்கள் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய வரி மற்றும் கட்டணங்களை செலுத்தாமல் காலம் தாழ்த்தவும், தவிர்க்கவும் வழிவகுக்கும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்

கொள்ளப்படுகிறது. எனவே, மேற்கண்ட மனுவில் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துவதை தவிர்க்கவே உண்மைக்கு புறம்பான புகார் தெரிவித்துள்ளார். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும், திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் தனது 07.01.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

திரு. கன்னியப்பன் என்பவர் திருச்செங்கோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்த அசல் வழக்கு OS.No. 111/2024 உரிமையியல் நீதிமன்றத்தில் 25.02.2025 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) மனுதாரரின் புகார் மனு, திருச்செங்கோடு நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

இந்நேர்வில், திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் தனது அறிக்கைகளில் சொத்து வரி வசூலித்தல் தொடர்பான நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்ட நிலையில் மனுதாரர் திரு. கே. கன்னியப்பன் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துவதை தவிர்க்கவே உண்மைக்கு புறம்பான புகார் தெரிவித்துள்ளதாக தெரிவித்து, மனுதாரர் திரு. கன்னியப்பன் திருச்செங்கோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நகராட்சிக்கு எதிராக அசல் வழக்கு OS.No. 111/2024 தொடரப்பட்டுள்ளதாகவும், அவ்வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquirieis Act 1962 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. கே. கன்னியப்பன்,
12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
க.எண்.3/133, போக்கம்பாளையம்,
குமரமங்கலம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம்,

நாமக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி,
நாமக்கல்மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032